# நெருப்பாற்றின் பத்து ஆண்டுகள்!

■ நீரை.மகேந்திரன்



ஓவியம் : ரவி பேலட்

**ச**மூக மாற்றம் என்பது ஒரே நாளில் நிகழ்வதில்லை. அது ஒரு தொடர் நிகழ்வு. அதன் ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒத்த சிந்தனை கொண்ட தனித்த ஆளுமைகள் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

அதுவரையிலான வரலாற்றை அழித்துவிட்டு, ஆதாரங்களுடன் புதிய வரலாற்றை எழுதும்போது, மக்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்படுகிறது. அரசியல் சீராகிறது. பண்பாட்டு வளர்ச்சி வளம் பெறுகிறது. சமூக மாற்றத்துக்குக் களம் அமைக்கும் தனிநபர்களும் அந்தக் கொந்தளிப்பான காலத்திலிருந்துதான் பீனிக்ஸ் பறவையைப் போல, உயிர்த்து வருகின்றனர்.

சுருங்கச் சொல்வதெனில் ஒரு சமூக மாற்றம், அதில் ஆதிக்கம் செலுத்தும் ஆளுமை உருவாகுவதற்கு முன்னும் பின்னும் கடும் உழைப்பைக் கோருகிறது, காலம். உலக வரலாறு நெடுகிலும் இதுதான் வரலாற்று இயங்கியல் விதி.

மன்னராட்சியை வீழ்த்திய பிரெஞ்சுப் புரட்சி 10 ஆண்டுகள் நீண்டது. மாபெரும் ரஷ்யப் புரட்சி 1917-இல் நிகழ்கிறது எனில், அதற்கு முன்பான பத்தாண்டுகள், வருங்காலத்தில் வர இருக்கின்ற மாற்றத்தை முன்னறிவித்தது. அங்கிருந்துதான் லெனின் பிறந்தார்.

செஞ்சீனத்தின் விடுதலையில் மாவோ பெரும் பங்கு வகித்தவர். மக்களைத் திரட்டிய நெடும் பயணத்தை 1935-இல் தொடங்கினார். அங்கிருந்துதான் மாவோ மாபெரும் ஆளுமையாக உருவெடுக்கிறார்.

## வரலாற்றில் ஆளுமைகள்

தமிழ்நாட்டில் சனாதன அடிமை முறைகளை ஒழித்து, மூடநம்பிக்கை ஒழிப்புப் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்குத் தந்தை பெரியார் உருவாகி வந்தார். அவரிடமிருந்து அண்ணா உருவானார். சமூக மாற்றத்தை ஆட்சி அதிகாரத்தின் மூலம் மக்களுக்கான இயக்கமாக மாற்றிக் காட்ட முனைந்தார் அண்ணா.

இந்தியத் தேர்தல் ஜனநாயகத்தில் ஒரு மாநிலக் கட்சி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது அதுவே முதல் முறை. 1957 முதல் 1967 வரை அண்ணாவின் ஆளுமை உலகம் அறிந்தது. இந்தியாவில் மாநிலக் கட்சிகளின் ஜனநாயகத்தைத் தமிழ்நாட்டில் இருந்து தொடங்கி வைத்தார் அண்ணா. தமிழ்நாட்டின் ஆட்சி அதிகார மாற்றத்தில் மிக நெருக்கடியான காலகட்டம் என்பது அதன் பின்னர்தான் தொடங்குகிறது. அந்தக் காலகட்டம் கலைஞர் என்ற ஆளுமையை உலகுக்கு அறிவித்தது. அதாவது, கலைஞர் எனும் தன்னிகரற்ற தலைவன் உருவான காலம் என்பது 1967 முதல் 1977 வரையிலான பத்தாண்டுகள் எனலாம்.

## கலைஞர் உருவானார்

'அதற்கு முன் கலைஞர் ஆளுமையாக இல்லையா?' என்கிற கேள்வி எழலாம். கலைஞர் அதற்கு முன் ஆளுமையாக இருந்தார். திரைத்துறையில் தவிர்க்க முடியாத உச்சத்தில் இருந்தார். இலக்கியத்திலும் அவரது எழுத்துகள் அடையாளம் தந்திருந்தன. அரசியலிலும் கழகத்தின் முன்னணியில் இருந்தார். அவை எல்லாவற்றையும்விட கலைஞரை கலைஞருக்கே அடையாளம் காட்டிய ஆண்டுகளாக அந்தப் பத்தாண்டுகள், மிகக் கொந்தளிப்பான ஆண்டுகளாக இருந்தன.

1967-இல் தேர்தலுக்காக சைதாப்பேட்டை தொகுதியில் கலைஞரை நிறுத்துவதற்காக முடிவு செய்த பின்னர், வேட்பாளர் அறிவிப்பு மேடையில் சைதாப்பேட்டை என்று கூறிவிட்டு 'பதினொரு லட்சம்' என அண்ணா அறிவிப்பிலிருந்து தொடங்கும் கலைஞரின் புதிய அத்தியாயம் அவரது 'நெஞ்சுக்கு நீதி'யின் இரண்டாம் பகுதி முடியும் வரையிலான நாட்கள் வரை அவரை காலத்தால் அழிக்க முடியாத கல்மரமாக மாற்றுகிறது.

## எத்தனை புயல்கள்?

அந்த மரம்தான் எத்தனை எத்தனை புயல்களைச் சந்தித்துள்ளது. ஆட்சி அதிகாரம், நெஞ்சுக்கு நெருக்கமான அண்ணாவின் இறப்பு, ஆட்சியைத் தக்கவைக்கும் போராட்டம், அதிகாரப் பறிப்பு, கட்சியில் குழப்பம், ஜனநாயகத்துக்கான உரத்தக் குரல், தோழமைகளின் இழப்புகள், துரோகங்கள் என அந்தப் பத்தாண்டுகளின் ஒவ்வோர் ஆண்டிலும் பெரும் சோதனைகளைச் சந்தித்தார் கலைஞர்.

1970-ஆம் ஆண்டு அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவிக்கும் போது மின்சாரம் தாக்கிக் கீழே விழுந்து உயிர் பிழைத்தார். அப்போது உயிர் தப்பியமைக்காக ஒரு குறிப்பு தருகிறார். 'அது மட்டும் அன்றைக்கு நடந்திருந்தால் என் வாழ்க்கையில் எத்தனை நண்பர்கள் எனக்குத் துரோகி ஆனார்கள் என்ற கசப்பு மிகுந்த கணக்கே என் கவனத்துக்கு வந்திருக்காது, என் நெஞ்சத்தையும் கலக்கி இருக்காது' என்கிறார்.

> **'தண்டவாளத்தில் தலைவைத்துப் படு என்றாலும், அமைச்சராகப் பதவி ஏற்றுக்கொள் என்றாலும், இரண்டையும் ஒன்று போலவே எடுத்துக் கொள்வான் என் தம்பி' எனக் குறிப்பிட்டார் அண்ணா.**

## ஒரே மனநிலை

தேர்தல் வெற்றிகளை அவர் பெரிதாகக் கொண்டாடியது இல்லை. முதன்முறையாக அமைச்சரவைப் பொறுப்பேற்ற போதும் ஆரவாரம் காட்டியதில்லை. அதற்கு பேரறிஞர் அண்ணாவின் ஒரு மேடைப் பேச்சு சான்றாக இருக்கும். 'தண்டவாளத்தில் தலைவைத்துப் படு என்றாலும், அமைச்சராகப் பதவி ஏற்றுக்கொள் என்றாலும், இரண்டையும் ஒன்று போலவே எடுத்துக் கொள்வான் என் தம்பி' எனக் குறிப்பிட்டார் அண்ணா.

1967-இல், தேர்தல் வாக்குப்பதிவுக்கு முந்தைய நாள், களப்பணிகளைப் பார்வையிட்டு வந்தவரை கோட்டூர்புரம் அருகே கொலை செய்ய முயன்றனர் சிலர். சாரங்கன் என்கிற தொண்டர் இல்லையேல், கலைஞரை அதற்குப் பின் பார்த்திருக்க முடியாது. கலைஞரைக் கொல்வதற்கான முயற்சிகளில் அது முதல் முயற்சி அல்ல. ஆனால், அடுத்த 50 ஆண்டுகளின் வரலாற்றை மாற்றி எழுதக்கூடிய ஒரு தலைவனைக் கொல்வதற்கான முதல் முயற்சி.

அந்தத் தேர்தல் ஆட்சி மாற்றம் நிகழக்கூடிய தேர்தல் என்பதைத் தாக்குதல் நடத்தியவர்கள் அறிவர். ஆட்சி மாற்றத்துக்கு அண்ணாவின் தளகர்த்தர்களில் கலைஞரின் கரங்கள் வலுவானவை என்பதையும் அவர்கள் கணித்திருந்தனர் என்பது தான் அந்தக் கொலை முயற்சி சொல்லும் பாடம்.

## சோதனைகளின் தொடக்கம்

1968-ஆம் ஆண்டு இறுதியில் இருந்து அவரது சோதனையான காலகட்டம் தொடங்குகிறது. செப்டம்பர் மாதத்தில் அண்ணா வயிற்று வலி தாங்காமல் அவதிப்பட்ட சமயத்தைப் பற்றிப் பின்னர் எழுதுகையில், "அண்ணாவை கொடுமைப் படுத்திய நோயை நினைக்கும் பொழுதெல்லாம் கண்ணீர் பொங்கும், கணக்கும் நெஞ்சம்" எனப் பதிவு செய்கிறார்.

1969-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் தேதி அண்ணா மறைவின்போது ஆட்கொண்ட துயரம், தொண்டர்களின் நெஞ்சத்தில் மட்டுமல்ல, அடுத்தப் பத்து நாட்கள் கழகத்திலும் சூறாவளி வீசியது.

தி.மு.க சட்டமன்றக் கட்சியின் தலைவராக கலைஞர் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்கிற தகவலை, நாவலர் சொல்லும் வரையில் அந்தச் சூறாவளி நீடித்தது. 'முள்முடி என் தலையில் சூட்டப்பட்டது' என்றார் கலைஞர் அந்த நிகழ்வை. எனினும், அந்த நெருக்கடிகளை அவர் தனக்கான நெருக்கடிகளாகப் பார்க்கவில்லை.

அந்த நாட்களைப் பதிவுசெய்துள்ள பலரும் கலைஞருக்கு இருந்த எதிர்ப்புகளைக் குறிப்பிடத் தவறவில்லை. அவற்றை எதிர்கொண்டு, "அண்ணா அவர்கள் அமைத்த அரசை தொடர்ந்து கட்டிக் காப்பதுதான் தனது கடமை" என நின்றார் கலைஞர்.

...நீளும்

## திராவிட இயக்க இதழ்கள் - குறள்நெறி



**த**மிழறிஞர் சி.இலக்குவனார் ஆசிரியராக இருந்து, 1964-ஆம் ஆண்டு ஜனவரி 15 முதல் கொண்டுவரப்பட்ட இதழ் 'குறள்நெறி'. மாதம் இருமுறை இதழாக வெளிவந்த இதன் கொள்கை, 'வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க' என்பதே..!

இந்த இதழில் திருக்குறள் விளக்கம், திருக்குறள் விளக்கக் கதைகள், குறள் ஆராய்ச்சிக் கட்டுரைகள், குறள் உரைகளில் திருவள்ளுவருக்கு முரணாக இடம் பெற்றுள்ள மாறுபாடுகளும் அவற்றால் தமிழுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் ஆகியவை பற்றிய கட்டுரைகள் எனப் பலவற்றை, இலக்குவனாரே படைத்து வழங்கினார். அந்தப் படைப்புகள், திருக்குறள் ஆராய்ச்சியில் இவருக்கெனத் தனியிடத்தைப் பெற்றுத்தந்தன.

இந்தப் படைப்புகளை விரும்பிய வாசகர்கள், 'இதை வார இதழாக மாற்றக்கூடாதா? பக்கங்களைக் கூட்டக்கூடாதா?' என்றெல்லாம் வேண்டினர். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு 'குறள்நெறி'யை நாளிதழாகவும் கொண்டு வந்தார். அந்த நாளிதழைத் தொடங்கியபோது இலக்குவனார் இப்படி எழுதினார்:

"நற்றமிழில் உரையாட வேண்டும், எழுத வேண்டும் என்று கருதுபவர்களால்கூட நற்றமிழைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகி விடுகின்றது.

நமக்கோ நாளும் நாளும் செந்தமிழ் சாகடிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு பாழும் வயிற்றை வளர்த்துக் கொண்டிருக்க இயலவில்லை. 'மெல்லத் தமிழ் இனிச்சாகும்' எனும் பேதை மொழியை நாம் அணுவாகச் செத்தேனும் பொய்யாக்க வேண்டும் என்று உறுதிபூண்டுவிட்டோம். 'உள்ளம் உடைமை உடைமை' எனும் திருவள்ளுவரின் திருவாய் மொழிக்கேற்ப உள்ள நாம் செந்தமிழ் காக்கும் பணியில் இச்செய்தியிதழை ஆளாக்க முற்பட்டுவிட்டோம்".

'குறள்நெறி' மாதம் இருமுறை இதழை, தான் மறையும் வரை (1973) இலக்குவனார் நடத்தி வந்தார். பிறகு 2021 முதல் அது மின்னிதழாக வந்துகொண்டிருக்கிறது. 'குறள்நெறி' (Kuralneri) என்ற ஆங்கில மாதம் இருமுறை இதழையும் இவர் நடத்தி வந்தார் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்த இலக்குவனார் வேறு யாருமல்ல. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூரில் பள்ளி இறுதி வகுப்புப் பயின்றபோது அவரது ஆசிரியராகத் திகழ்ந்தவர். தமக்குத் 'தமிழுணர்வுடன் சுயமரியாதைப் பண்பையும் ஊட்டியவர்' என்று இவரைப் பற்றித் தமது தன்வரலாற்று நூலாகிய 'நெஞ்சுக்கு நீதி'யில் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

## :ப்ளாஷ்பேக்





நாகராசன்

### 'மணி'யான புகைப்படம்!

08.04.1994 அன்று தலைவர் கலைஞரை அவரது கோபாலபுரம் இல்லத்தில் குடும்பத்தினரோடு சென்று சந்தித்தோம். என் மகன் - மகளுக்கு தலைவர் கலைஞர்தான் 'விடுதலை மணி' என்றும், 'அறிவு மணி' என்றும் பெயர் சூட்டினார். நேரில் சந்தித்தபோது, அவர்களை எல்லாம் நலம் விசாரித்தார். நன்றாகப் படிக்கச் சொல்லியும் அறிவுறுத்தினார். மேலும் அவர்கள் கைகளில் 100 ரூபாய் கொடுத்து வாழ்த்தினார். தனியாகப் பல முறை தலைவரைச் சந்தித்திருந்தாலும் குடும்பமாகச் சந்தித்து எடுத்துக் கொண்ட புகைப்படம் என்பதால், இது மனதுக்கு நெருக்கமான புகைப்படம்.

**-நாத்திகம் நாகராசன், தலைமைக் கழகச் சொற்பொழிவாளர், காஞ்சிபுரம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அரசாங்க கார் திருப்பம்

**1976-ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று, சென்னையில் ஒரு பள்ளி விழாவில் கலந்துகொண்டு வீட்டுக்குத் திரும்பினார் கலைஞர். முன்னதாக "முதலமைச்சர் என்ற நிலையில் நான் கலந்துகொள்ளும் கடைசி நிகழ்ச்சியாக இது இருக்கும்" என மேடையிலேயே அறிவித்திருந்தார். மாலை வீட்டுக்கு வந்ததும் ஆட்சியைக் கலைத்துவிட்டார்கள் என்று செய்தி வந்தது. உடனடியாகத் தெருப் பக்கம் திரும்பிப் பார்த்து, தான் பயன்படுத்திக் கொண்டிருந்த அரசாங்க காரை உடனே எடுத்துச் சென்றுவிடுமாறு கூறிவிட்டு மாடி ஏறினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 252




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131